செய்தி வெளியீடு எண்: 041 நாள்: 13.01.2018

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சேலம் இரும்பாலை சாலை சந்திப்பு பாலம் அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை**

---

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே நம்முடைய கோரிக்கைகளை அவர்களது கவணத்திற்கு எடுத்து சென்றவுடன் சேலம் மாநகரத்திலே எத்தனை பாலங்கள் வேண்டுமென்று கேட்டார்கள். நாங்கள் ஒவ்வொன்றாக செல்லிக்கொண்டு இருக்கும் போது அம்மா அவர்கள் இவ்வாளவு பாலங்கள் வேண்டுமா, அவ்வளவு பாலம் இதுநாள் வரை கட்டவில்லைய நான் கட்டிதருகிறேன் என்று சொல்லி கேட்ட அத்தனை பாலங்களும் கட்டி தந்தார்கள் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். தமிழகத்திலே 234 தொகுதிகள் இருந்தாலும் கூட சேலம் மாநகராட்சி இதுவரை யாரும் கண்டுகொள்ளாத இருந்த சூழ்நிலையிலேயே இன்றைக்கு அம்மா அவர்களின் இடத்தில் சொல்லி சேலம் வளர்ந்து வருகின்ற நகரம், மிகுந்த போக்கு வரத்து நெறிசல் உள்ள நகரம் ஆகவே மாவட்டத்திற்கு தேவையான பாலங்கள் கொடுத்தால்தான் எதிர்காலத்தில் போக்குவரத்து நெறிசல் இல்லாத ஒரு மாநகரமாக உறுவாக்க முடியும் என்ற கருத்தினை கூறிய உடன் அதற்கு ரூ.320 கோடி ஒதுக்கி இன்றைக்கு மிக பிரமாண்டமாய் காட்சியளித்து கொண்டு இருகிறது.

அதே போல் ஏ.வி.ஆர் ரவுன்டானவில் இருந்து குறங்கசு சாவடி வரை ஒரு பாலம், திருவாகவுண்டனூர் பாலம் அடிக்கல் நாட்டப்பட்டு நானே திறந்து வைத்துள்ளளேன். அப்பாலம் இப்போது பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மாநகரத்தின் மையபகுதில் இரயில்கள் செல்லுகின்ற காரணத்தால் அடிக்கடி போக்குவரத்து பாதிக்ப்படுகிறது. அதனை தடுக்க செவ்வாய் பேட்டை, முள்ளுவாடி கேட் இரண்டு பாலங்கள் அமைத்து தர அம்மா

அவர்களிடம் கோரிக்கை வைத்தோம் அதனையும் இதயதெய்வம் அம்மா அவர்கள் நிறைவேற்றி தந்தார்கள். மணல்மேட்டில் ஒரு பாலம் அதேபோல் இன்றைக்கு பழைய சூரமங்கலத்திற்கு செல்வதற்கு இரயில்வே கீழ் பாலம் அம்மா அவர்கள் காலத்திலேயே கட்டிமுடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

இப்போது இரும்பாலை பகுதியில் செகோ சர்வுக்கு அதிகமான லாரிகள் சென்று வருவதனால் போக்குவரத்து சூழ்ந்த மையப்பகுதியாக இந்த சாலை சந்திப்பு இருக்கின்ற காரணத்திலே இங்க உயர்மட்ட பாலம் ஒன்று அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே கேட்டோம் அதையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தந்து இன்றைக்கு மத்திய அரசின் அனுமதி பெற்று இந்த அத்தனை பாலங்களும் நான் நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் அம்மா அவர்களிடம் கூறி அத்தனை பாலங்களும் இன்றைக்கு தேர்வு செய்து கொடுத்துள்ளார்கள். போடிநாயக்கன்பட்டியில் ஒரு பாலம். இதனை எதற்காக செல்லுகின்றேன். என்றால் இதுவரை யாரும் கவனிக்கப்படாத இருந்த சேலம் மாநகரத்தை இதயதெய்வம் அம்மா அவர்கள் கவனத்திற்கு எடுத்து சென்றதும் சேலம் மாநகர மக்கள் கோரிக்கையை ஏற்று இவ்வளவு பாலங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது.

அது மட்டும் அல்லாமல் நம்கண்முன்னே அடிக்கல் நாட்டி, நாமே திறக்கிறோம். அதுவே மிகபெரிய அதிசம் வரலாற்று சாதனை, சேலம் மாநகரம் வளர்ந்து வரும் மாநகரம், போக்குவரத்து அற்ற மாநகரமாக உருவாக்கப்படும். இன்றைக்கு இன்னும் ஒரு பாலம் அமைபடும்போது மேலும் போக்குவரத்து அதிகரிக்கும் என்னென்றால் இது தேசிய நெடுஞ்சாலை தினந்தோறும் சென்னை செல்ல கூடிய சாலையாக இருக்கின்ற கரணத்திலே அதிக போக்குவரத்து மிகுந்த சாலை, அதிக கனரக வாகனம் செல்ல கூடிய சாலையாக உள்ளது. எனவே ஒரு புறவழிச்சாலை வேண்டுமென்று பாரத பிரதமரிடன் கோரிக்கை வைத்தோம். மாண்புமிகு மத்திய தரைவழி, கப்பல் போக்குவரத்துதுறை அமைச்சர்

திரு.நித்தின்கட்காரி அவர்கள் சென்னை வந்திருந்தபோது அவர்களிடம் கூறியபோது உடனடியாக நிறைவேற்றி தருவதாக கூறிவுள்ளார்கள்.

பொது மக்களுக்கு சாலை வசதி மிகவும் அவசியம் இப்போது இருக்கின்ற வகன போக்குவரத்தை கட்டுப்படுத்த புறவழிச்சாலை அமைக்கப்படும் என்ற உறுதியளித்துள்ள மாண்புமிகு மத்திய தரைவழி, கப்பல் போக்குவரத்துதுறை அமைச்சர் திரு.நித்தின்கட்காரி அவர்கள் சேலம் மாவட்ட மக்கள் மற்றும் நாமக்கல் மாவட்ட மக்களின் சார்பாக மனமாற, உலமாற இந்நிகழ்ச்சியில் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். நாங்கள் கேட்டவுடன் அதே இடத்தில் இதற்கான அறிவிப்பினை அவர்கள் வெளியிட்டார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி இதயதெய்வம் அம்மா அவர்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் அவர்கள் செய்த சாதனை நம் மனதைவிட்டு அகளாது சேலம் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள பாலங்களை பார்க்கும் போது மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவுதான் நமக்கு வருகிறது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது பாலத்திற்கு நிதி ஒதுகீடு செய்து அவர்கள் அளித்த உத்தரவின் பேரில் தான் இந்த பாலங்கள் எல்லாம் இன்று உறுவாக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்க்கு படி, படியாக கொண்டு வரப்பட்டுள்ளது.

அதே போல் பிரமாண்டமாக நவீன வசதிகொண்ட பஸ் போர்ட் நம் சேலத்திற்கு வரவுள்ளது. மாண்புமிகு மத்திய தரைவழி, கப்பல் போக்குவரத்துதுறை அமைச்சர் திரு.நித்தின்கட்காரி அவர்கள் சென்னையில் இதனை அறிவித்தார்கள். சேலம், கோவை, மதுரை மாவட்டங்களில் இந்த பஸ் போர்ட் விரைவில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு மத்திய தரைவழி, கப்பல் போக்குவரத்துதுறை அமைச்சர் திரு.நித்தின்கட்காரி அவர்களுக்கு சேலம் மாவட்ட மக்கள் சார்பாக மீண்டும் ஒருமுறை நன்றிதெரிவித்து கொள்கிறேன். சேலம் மாவட்ட மக்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி தரும் அரசாக மாண்புமிகு புரட்சித்தலைவி

இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசாக செய்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியான தருதனத்தில் தெரிவித்து கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**